**<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி</u>**

**<u>அசல் வழக்கு எண். 154/2024</u>**

**<u>நாள் 07/09/2026 திங்கட்கிழமை</u>**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பின் 1–வது சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டில் 54–வது பிரிவின் ஏற்ப்பாட்டின் படி சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் – கார்த்திக் (PW1) | த/பெயர் – கஜேந்திரன் |
| வயது – | தொழில் – |
| விலாசம் – | |

**<u>முதல் விசாரணை–</u>**

சாட்சி ஆஜர் அவருடைய முதல் விசாரணையை பொருத்து. பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டது. அவர் மூலம் கீழ்க்கண்ட ஆவணங்கள் அவர் தரப்பில் குறியீடு செய்யப்பட்டன.

1. (1). 23.09.2024 தேதியிட்ட பதிவிறக்க பட்டா **வா.சா ஆ 1** ஆகவும்,

(2). 25.03.2021 தேதியிட்ட கிரைய பத்திரம் அசல் **வா.சா ஆ 2** ஆகவும்,

(3). வழக்கு சொத்திற்கான வில்லங்க சான்றிதழ் **வா.சா ஆ 3** ஆகவும்,

(4). 17.05.2022 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் **வா.சா ஆ 4** ஆகவும்,

(5). அஞ்சல் ஒப்புகை அட்டை **வா.சா ஆ 5** ஆகவும்,

(6). மனுதாரரின் ஆதார் அட்டை அசலுடன் சரிபார்க்கப்பட்ட நகல் **வா.சா ஆ 6** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

**(பிரதிவாதி தோன்றா தரப்பினர் என்பதால் குறுக்கு விசாரணை இல்லை)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**கூடுதல் சார்பு நீதிபதி**
**பொன்னேரி**